# ??????? ?????????????????? ??????
# ????????? ???????????????????!



யாழ்ப்பாணத்தின் வரலாற்றில் முதன்முறையாக "??????? ??????????? ????????????? ??????????" உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலான நாவற்குழியில் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை இந்த அரும்பொருள் காட்சியகம் பொதுமக்கள் பார்வைக்காக திறக்கப்படவிருக்கிறது.

இதுதொடர்பில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் தெரிவித்ததாவது,



சுமார் 12 பரப்பு காணியில் 3 மாடிக் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ளது இந்த அரும்பொருள் காட்சியகம். அதன் நுழைவாயிலில் சங்கிலிய மன்னன், எல்லாள மன்னன் இருவரின் உருவச் சிலைகள் அலங்கரிக்கின்றன. உள்ளே யாழ்ப்பாணப் பேரரசை ஆட்சி செய்த 21 மன்னர்களின் உருவச் சிலை நிறுவப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னர்கள் அனைவருக்கும் உருவச் சிலை அமைப்பது வரலாற்றில் இதுவே முதன்முறையாகும். இதுவரை சங்கிலியனுக்கு எல்லாளனுக்கு பண்டாரவன்னியனுக்கு சிலை எழுப்பியிருக்கின்றோம்.

ஆனால் முதன்முறையாக யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலாகிய நாவற்குழியில் எமது வரலாற்றுகளிலே பதியப்பட்டுள்ள யாழ்ப்பாணத்தை அடிப்படையாக வைத்து நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட தமிழ் மன்னர்களின் பெயர்களோடு அவர்கள் ஆட்சி செய்த ஆண்டுகளைப் பதிவு செய்து அவர்களது மாதிரி உருவச்சிலைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமன்றி எமது முன்னோர்கள் பயன்படுத்திய வண்டிகள் – கூடார வண்டில், திருக்கை வண்டில், சவாரி வண்டில் உள்பட எங்களுடைய போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் காட்சிப்படுத்தப்படவிருக்கின்றன.

1950 ஆம் ஆண்டுக்கு முன்னர் வெளிவந்த 17 மோட்டார்க் கார்கள் இங்கு காட்சிப்படுத்தப்படவிருக்கின்றன. தட்டி வான் என்று சொல்லப்படுகின்ற 2 ஆம் உலகப் போருக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் அறிமுகமான மக்கள் போக்குவரத்துக்குப் பயன்படுத்திய வாகனம் இங்கு காட்சிப்படுத்தப்படவுள்ளது.

முதலாவது தளத்திலே எங்கள் பாரம்பரியத்தோடு தொடர்புடைய பாரம்பரியமான பொருள்கள், யாழ்ப்பாணத்தில் தமிழர் பண்பாட்டில் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. பித்தளைப் பாத்திரங்கள் தொடக்கம் ஆரம்பகாலத்தில் வெளிவந்த கடிகாரம், வானொலிப் பெட்டி, எம் முன்னோர் பயன்படுத்திய அருவிவெட்டும் கருவி, போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் காலத்து நாணயங்கள், அதன்பின்னர் வெளிவந்த ஆங்கிலேயர் காலத்து நாணயங்கள், ஆங்கிலேயர் காலத்தில் யாழ்ப்பாணம் உள்பட நாடுமுழுவதும் உள்ள பகுதிகளின் ஒளிப்படங்கள் என இவை எல்லாம் காட்சிப்படுத்தப்படவுள்ளன.



இரண்டாவது தளத்திலே ஈழத்துப் புலவர்கள், பண்டிதர்கள், பாவலர்கள், பாடசாலைகளை நிறுவிய நிறுவுனர்கள் மற்றும் எமது சமய, கலாசார நிகழ்வுகளான சூரன்போர், நல்லூர் கந்தசுவாமி ஆலய மிகப் பழமை வாய்ந்த தோற்றங்கள், நல்லூர் கந்தசுவாமி ஆலய வரலாற்றை வெளிப்படுத்துகின்ற பெயர்கள், கீரிமலை நகுலேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், கோணேஸ்வரம் உள்ளிட்ட ஆலயங்களின் ஆதி ஒளிப்படங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

பழைய பத்திரிகைகள் – 1800ஆம் ஆண்டுகளிலிருந்து யாழ்ப்பாணத்தில் வெளிவந்த பத்திரிகைகளின் முதலாம் நாள் வெளிவந்த பத்திரிகைப் பிரதிகளின் முன்பக்கம் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

சுமார் 3 ஆயிரம் ஒளிப்படங்களைக் கொண்டு இரண்டாவது தள மாடியிலே வரலாற்று அடையாளங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

மூன்றாவது தளத்திலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்திரமும் வடிவமைப்பும் மாணவர்களால் வரையப்பட்ட மரபு ரீதியான ஓவியங்கள் – எங்களுடைய கலாசாரத்தை பிரதிபலிக்கின்ற ஓவியங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

மிகப் பெறுமதியான வரலாற்றுத் தடயங்களைக் காட்சிப்படுத்தவிருக்கின்றோம். யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களுக்கு எனச் சொந்தமான அரும்பொருள் காட்சியகம் இல்லை என்ற குறையினாலே – அதுபற்றிய அறிவு – ஆர்வம் எமது சமுதாயத்திலே இல்லாமல் போனதன் காரணமாக இங்கே இருந்த எமது அடையாளப் பொருள்களை தென்னிலங்கை வியாபாரிகள் வந்து வாங்கிச் சென்று தென்னிலங்கையிலும் வெளிநாடுகளுக்கும் அனுப்பிவிட்டார்கள்.



பழைய வீடுகளிலிருந்த பொருள்கள் எல்லாம் போய்விட்டன. எமது அடையாளங்கள் போய்விட்டன. ஆலயங்களில் இருந்த மிகப் பெறுமதியான வாகனங்கள்கூட விற்பனையாகிவிட்டன. தற்போது தென்னிலங்கையிலும் வெளிநாடுகளிலும் யாழ்ப்பாணத்து வாகனங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

எனவே இது மிகக் கவலையான விடயம். எங்களுடைய மண்ணிலே ஓர் அரும்பொருள் காட்சியகம் உருவாகவேண்டும் என்று பலர் விருப்பப்பட்டனர். காலஞ்சென்ற கலைஞானி செல்வரட்ணம் என்கின்ற இந்தத் துறையிலே ஆவர்மானவர். அவர் எவ்வளவோ முயற்சிகளை எடுத்தார்.

பேராசிரியர் கனகரட்ணம் மற்றும் குரும்சிட்டிக் கனகரட்ணம் என்று சொல்லப்படுகின்ற கண்டியில் வாழ்ந்த ஓர் அறிஞர் வீரகேசரிப் பத்திரிகை தொடக்கம் பலவற்றைச் சேகரித்துப் பாதுகாத்தவர், எப்படியாவது யாழ்ப்பாணத்தில் ஓர் அரும்பொருள் காட்சியத்தை உருவாக்கி மக்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்று காத்திருந்தார். எனினும் போர்ச் சூழலால் முடியவில்லை, அவர்கள் எல்லாம் மறைந்துவிட்டனர். அவர்கள் தேடி வைத்த பல பொருள்களும் அழிந்துவிட்டன.

இந்த நிலையிலேதான் சிவபூமி அறக்கட்டளை என்கின்ற எமது அமைப்பு 17 ஆண்டுகளாக வடபுலத்திலே மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான பாடசாலை, உறவுகளால் கைவிடப்பட்ட முதியோர்களுக்கான இல்லம் மற்றும் கீரிமலை புன்னிய தலத்திலே 11 மடங்கள் போரினால் அழிவடைந்த நிலையில் அங்கே ஒரு மடத்தைக் கட்டி எங்களுடைய பாரம்பரியங்களைப் பாதுகாக்கின்றோம்.

அதேபோன்று கிளிநொச்சியிலே மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான பாடசாலை, திருகோணமலை கோணேஸ்வரம் ஆலய காணியிலேயே மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான பாடசாலை – மடம் அமைத்துள்ளோம்.

யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலான நாவற்குழியில் திருவாசக அரண்மனை என்கின்ற அரண்மனையை 2018 ஆம் ஆண்டு அமைத்து அங்கே 652 திருவாசகப் பாடல்களையும் கருங்கல்லியே செதுக்கியுள்ளோம். அத்துடன், யாழ்ப்பாணம் சிவபூமி என்பதை நிலைநாட்டும் வகையில் 108 சிவலிங்கங்களை அமைத்துள்ளோம்.

இவற்றுக்கு அடுத்த பணியாக “சிவபூமி யாழ்ப்பாணம் அரும்பொருள் காட்சியகம்” அமைத்து

நிறைவேற்றியிருக்கின்றோம். இது தமிழர்களின் சொத்தாகும். என்னைப் பொறுத்தவரை சிறியேன் எத்தனையோ ஆண்டுகள் கண்ட கனவு இப்போது நனவாகிறது. நான் சேகரித்த பொருள்களை தமிழ் மக்களிடம் கையளிப்பதற்காகத்தான் இந்தப் பெரிய அரும்பொருள் காட்சியகத்தை அன்பர்களின் உதவியோடு அமைத்து நிறைவு செய்துகொண்டிருக்கின்றோம்.

எங்களுடைய மன்னர்களை புத்தகங்களில் படித்தோமே தவிர, அவர்களை எமது குழந்தைகளுக்குக் காட்சிப்படுத்தத் தவறிவிட்டோம். இங்கே 21 மன்னர்கள், அவர்கள் காட்சி செய்த காலம் எல்லாம் காட்சிப்படுத்துகின்றோம்.

இது அற்புதமான சொத்தாகும். சூரியன், சந்திரன் வானத்திலே நிலைத்திருப்பது போல, இந்த அரும்பொருள் காட்சியகமும் எத்தனை தலைமுறை இந்த மண்ணிலே வாழ்ந்தாலும் நிலைத்திருக்கவேண்டும் என்று எல்லாத் தெய்வங்களிடமும் நான் பிராத்திங்கின்றேன்.

பொதுமக்களாகிய நீங்கள் இதனைக் கவனமாகப் பாதுகாக்கவேண்டும். உங்களிடமும் ஏதாவது அரும்பொருள்கள் இருந்தால் அவற்றையும் இங்கு கொண்டுவந்து குடும்பத்தின் பெயரைப் பொறித்து பாதுகாப்பாக வையுங்கள்.

எதிர்காலத்திலே வன்னி, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களிலும் மலையகத்திலும் தமிழர்களுடைய பண்பாடுகளை வெளிப்படுத்தும் அரும்பொருள் காட்சியங்கள் இதைப் பார்த்து உருவாகவேண்டும்.பலர் இந்த முயற்சிலே ஈடுபடவேண்டும் என்று அன்போடு வேண்டிக்கொள்கின்றேன்.

இது ஓர் முன்மாதிரியான பணி. இது எந்தவொரு அரசியல் நோக்கத்துக்காகவோ அல்லது வாணிப நோக்கத்துக்காகவோ உருவாக்கப்பட்டதோ அல்ல. ஈழத் தமிழர்களுடைய வரலாற்றை கண்ணால் கண்டு எமது எதிர்காலச் சந்ததி உணரவேண்டும் என்பதற்காக எடுத்த முயற்சியாகும்.

இந்த அரும்பொருள் காட்சியகத்தை பார்வையிட வருவோருக்கு முதல் மூன்று நாள்களும் இலவச அனுமதி வழங்கப்படும். அதன் பின்னர் இந்த அரும்பொருள் காட்சியகத்தை செயற்படுத்துவதற்காக பாடசாலை மாணவர்களுக்கு 50 ரூபாய் அனுமதிச் சீட்டும் ஏனையோருக்கு 100 ரூபாய் அனுமதிச் சீட்டும் வழங்கப்படும் என்று சிவபூமி அறக்கட்டளை தீர்மானித்துள்ளது.

தென்னிலங்கையைப் பொறுத்தவரை சிங்கள மக்கள் எத்தனையோ அரும்பொருள் காட்சியங்களை வைத்துள்ளனர். எத்தனையோ வரலாற்றுத் தடங்களை அவர்கள் பாதுகாக்கிறார்கள். நாங்கள் ஊரிலே எல்லாவற்றையும் இழந்துவிட்டோம் என்று சோகத்தைச் சொல்லிக்கொண்டிருப்பதில் பயனில்லை. நாங்கள் நல்ல காரியங்களை திட்டமிட்டு செயற்படவேண்டும். இந்தப் பணிக்கு உதவிகளை வழங்கிய அத்தனை பேருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன் – என்றார்

# ‘?????????? ??????????? ?????????????
# ???????????? ???????????????? ??????????’



## ????????????? ???????????? ????????????- ??????
## ????????????

தமிழர்களுக்கு எதிரான இலங்கை அரசின் மிருகத்தனமான அடக்குமறை இனப்படுகொலைக்கான முயற்சியாக அங்கீகரிக்கப்படவேண்டும் என பிரித்தானிய பாராளுமன்றின் உறுப்பினரும் தொழிற்கட்சியின் நிழல் அதிபருமான ஜோன் மெக்டோனல் தெரிவித்துள்ளார்.

அமைதியான நீண்டகால அரசியல் தீர்வை பெற்றுக்கொள்ள தமிழர்களுக்கு உரிமை உண்டு என தாம் நம்புவதாகவும் கூறியுள்ளார்.

பிரித்தானியாவில் நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலுக்கான அறிக்கையில் இலங்கையின் சிறுபான்மையின தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கான மனித உரிமைகளை பாதுகாக்க வலியுறுத்த ஐ.நா மற்றும் காமன்வெல்த் மூலம் நாங்கள் செயல்படுவோம் என தொழிலாளர் கட்சி உறுதியளித்துள்ளதாக தெரிவித்து நேற்று அவர் வெளியிட்டுள்ள வீடியோ ஒன்றிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் கூறுகையில்,

தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ ஆக்கிரமிப்பு கவலையளிக்கிறது. இலங்கை இராணுவத்தை வடக்கு-கிழக்கிலிருந்து மீளப்பெறவேண்டும். தமிழர்களுக்கு எதிராக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்துவது குறித்து நாங்கள் குறிப்பாக கவலையடைகிறோம்.

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக கோட்டபாய ராஜபக்ஷ தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமை அங்கு எதிர்காலத்திற்கான கவலைகள் மற்றும் அச்சங்களை முன்வைக்கும் ஒரு நிலமையை கொண்டிருப்பதால் பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் இலங்கையின் மனித உரிமை நிலைமை தொடர்பில் கண்காணிக்க வேண்டும்.

மேலும் இலங்கை தொடர்பில் பிரித்தானிய அரசிற்கும் குறிப்பிட்ட பங்கு உண்டு என நம்புகிறேன். இலங்கையுடனான எங்கள் உறவு வர்த்தக உறவு. குறிப்பாக மனித உரிமைகளை அடிப்படையாக கொண்டது என்பதை உறுதி செய்வதன் அடிப்படையில். ஆனால் இது ஐ.நா. தீர்மானத்தை செயல்படுத்துவதில் முன்னேற்றம் அடைந்துள்ளது.

மேலும் தொழிற்கட்சி பிரித்தானியாவிலுள்ள தமிழ் சமூகததிற்காக எப்போது குரல் கொடுக்கும். அதேவேளை தாயகத்திலுள்ள அவர்களது குடும்பத்தினருக்கும் ஆதரவளிக்கும் என அவர் அதில் தெரிவிதுள்ளார்.

https://www.youtube.com/watch?v=LQAnS1DyGqE&feature=youtu.be

---

# ?????????? ???????????? ?????? ????????????? ??????? ; ???????? ????????? ??????????? ?????????????




தமிழர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த இலங்கை தூதரகத்தின் முன்னாள் பாதுகாப்பு அதிகாரி பிரியங்கா பெர்னாண்டோ மீதான **‘ICPPG’** தொடர்ந்த வழக்கின் இறுதி தீர்ப்பு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

வெஸ்மினிஸ்டர் நீதவான் நீதிமன்றில் இன்று நடைபெற்ற குறித்த வழக்கின் மீதான இறுதிக்கட்ட விசாரணைகளின் முடிவிலேயே தலைமை நீதிபதி இந்த அறிவிப்பை விடுத்தார்.

பிரியங்கா பெர்னாண்டோவிற்கு எதிரான பிரதான சாட்சிகள் மூவரின் சாட்சியங்கள் கடந்த ஒக்டோபர் மாதம் நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது எடுத்துக்கொள்ளப்பட்டிருந்த நிலையில் இன்று 4 ஆவதும் இறுதியுமான நபரின் சாட்சியம் மன்றினால் எடுத்துக்கொள்ளப்பட்டது.

மதிய நேர இடைவேளை வரை தொடர்ந்த இந்த சாட்சியப்பதிவு விசாரணையையடுத்து பிரியங்கா பெர்னாண்டோ தரப்பு சாட்சி ஒருவரின் சாட்சியமும் மன்றினால் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து குறித்த வழக்கினை எதிர்வரும் டிசம்பர் மாதம் 6 ஆம் திகதி க்கு ஒத்திவைத்த தலைமை நீதிபதி அன்றைய தினம் இறுதித்தீர்ப்பு வழங்கப்படும் எனவும் அறிவித்தார்.

இதேவேளை குறித்த வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் நீதிமன்றின் முன் ஒன்று திரண்ட புலம்பெயர் தமிழர்கள் பிரியங்கா பெர்னாண்டோவை கைது செய்யவேண்டும் என்ற கோசங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டம் ஒன்றிலும் ஈடுபட்டிருந்தனர்.






கடந்த ஆண்டு (2018) பிரித்தானியாவிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு முன்னாள் புலம்பெயர் தமிழர்கள் சுதந்திர தின எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவேளை தூதரகத்தின் அப்போதைய பாதுகாப்பு அதிகாரியாக கடமையாற்றிய பிரியங்கா பெர்ணான்டோ ஆர்பாட்டக்காரர்களை பார்த்து கொலை அச்சுறுத்தல் விடுத்திருந்தார். இராணுவ அதிகாரிக்குரிய உத்தியோக பூர்வ உடையில் தூதரகத்திற்கு வெளியே நின்றிருந்த அவர் ஆர்பாட்டக்காரர்களை பார்த்து கழுத்தை அறுப்பேன் போன்ற சமிக்ஞை ஒன்றை காண்பித்திருந்தார்.

இதனையடுத்து சட்டவாளர் அருண்கணநாதன் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் கீத் குலசேகரம் ஆகியோரின் வழிநடத்தலுடன் **ICPPG** யினால் அவருக்கு எதிராக பிரித்தானிய நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு நடப்பாண்டில் (2019) கடந்த பெப்ரவரி மாதம் வெஸ்மினிஸ்டர் நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது அதில் பிரியங்கா பெர்ணான்டோ மீதான இரு குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் அவருக்கு எதிராக பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

எனினும் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவிற்குஇராஜதந்திர தண்டனை முக்தி இருப்பதாக சிறிலங்கா வெறிவிவகார அமைச்சுஇ பிரித்தானியவெளிவிவகார அமைச்சின் ஊடாக தெரியப்படுத்திய நிலையில் அவர் மீதான பிடியாணையை வெஸ்ட்மினிஸ்டர் நீதிமன்றம் மீளப் பெற்றுக்கொண்டது.

பின்னர் மார்ச் மாதம் நடைபெற்ற அடுத்தகட்ட வழக்கு விசாரணையில் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவின் கடமைகள் தொடர்பில் நீதிமன்றினால் கோரப்பட்டதுடன் அதில் கழுத்தை அறுக்கும் சைகையைகாண்பித்து அச்சுறுத்திய நடவடிக்கை அவரது இராஜதந்திர கடமையுடன் தொடர்பில்லை என்றுநீதிமன்றம் அறிவித்தது.

அதேவேளை, பிரியங்கா தரப்பிலிருந்து ஆஜரான சட்டத்தரணிஇ வழக்கு விசாரணைக்கு முன்னதாக அனுப்பிவைக்கப்பட்ட ஆவணங்களை நீதிமன்ற அதிகாரிகள் கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை என மன்றில்

எடுத்துரைத்தார் இதனையடுத்து நீதி மன்றின் மீதான இக் குற்றச்சாட்டுகளுக்கு இடமளிக்காது மீண்டும் ஒரு சர்ந்தர்ப்பதை அவர்களுக்கு வழங்க தீர்ப்பினை ஒத்திவைத்தார்

இதனையடுத்து பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் கடந்த ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதி வெஸ்மினிஸ்டர் நீதவான் நீதிமன்றில் மீண்டும் மேற்படி வழக்கு விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டு அன்றைய தினம் பிரதான சாட்சிகள் மூவரின் சாட்சியங்கள் மன்றில் பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையிலேயே இன்று மேற்படி வழக்கின் மீதான இறுதிக் கட்ட இரு தரப்பு விசாரணைகள் இடம்பெற்றதுடன் தீர்ப்பின் இறுதி திகதியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

# ?????????? ????? ??????????? ?????????



இலங்கையின் புதிய ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமராக மஹிந்த ராஜபக்ஷவும் நாளை (18) பதவிப்பிரமானம் செய்யவுள்ளனர்.

இதேவேளை, தேர்தலில் கோட்டாபய ராஜபக்ச வெற்றி பெற்றதையடுத்து பிரதமர் ரணில் , நிதியமைச்சர் மங்கள , விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ உட்பட்ட அமைச்சர்கள் பதவி விலக முடிவு செய்துள்ளனர்.

அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ சற்றுமுன் அமைச்சுப் பதவியையும் கட்சியில் வகிக்கும் பதவிகளையும் ராஜினாமா செய்தார். ஏனையவர்கள் இன்று மாலை பதவிகளை இராஜினாமா செய்வார்களென தெரிகிறது.

இதேவேளை நாளை (18) காலை சுபநேரத்தில் அனுராதபுரம் ருவன்வெலிசாயவில் வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் புதிய ஜனாதிபதியாக கோட்டாபய பதவிப்பிரமாணம் செய்வாரென தெரிவிக்கப்படுகிறது.

---

# ???????????????????? ??????? ????????? ?.??. ??????????????? ????? ???????? ??????? ?????? ?????????????? ????????? ?????????- ICPPG ??? ?????



## ?????? ??????? ???????? ?????????? ????????????? – ?.??. ?????????????????

# ICPPG ?????? ???

யுத்தக்குற்றவாளிகளான இலங்கை இராணுவம், ஐ.நா. அமைதிப்படையாக மாலி செல்வதை தடுக்க தமிழ் அமைப்புக்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென இனப்படுகொலையை தடுப்பது மற்றும் வழக்கு விசாரணைக்கான சர்வதேச மையம் (**ICPPG**) அறை கூவல் விடுத்துள்ளது.

243 இராணுவ வீரர்களை கொண்ட குழுவொன்று எதிர்வரும் செவ்வாய்கிழமை (நவம்பர் 12 ஆம் திகதி) ஐ.நா. அமைதிகாக்கு பணிக்காக மாலி புறப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் ஐ.நா.விற்கு புகார் மனு ஒன்றினை அனுப்பியுள்ள ICPPG மேற்படி தமிழ் அமைப்புக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

243 இராணுவ வீரர்களை கொண்ட குழு மாலிக்கு புறப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது தொடர்பில் அதிர்ப்தி வெளியிட்டுள்ள **ICPPG**, ஐ.நா.வின் அமைதி நடவடிக்கைகளுக்கான பொது செயலாளர் **Jean Pierre Lacriox** மற்றும் ஐ.நா. மனித உரிமைகளுக்காக உயர்ஸ்தானிகர் **Michelle Bachelet Jeria** ஆகியோருக்கு மேற்படி புகார் மனுவினை அனுப்பிவைத்துள்ளது.

அதில் ஐ.நா. அமைதிகாக்கு பணியில் இலங்கையின் 243 இராணுவ வீரகள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளமை தொடர்பில் அதிர்ச்சியடைந்துள்ளதாக தெரிவித்துள்ள **ICPPG,** போர்க்குற்றவாளியான மேஜர் ஜெனரல் ஷவேந்திர சில்வா தலைமையில் அவரின் பணிப்பின் கீழ் அனுப்பப்படும் இராணுவ வீரர்களை ஐ.நா. பணியில் இணைத்துக்கொள்வது எதிர்காலத்தில் ஆபத்தை ஏற்படுத்தும் என தெரிவித்துள்ளது.

அதேவேளை, போர்க்குற்றவாளியான ஷவேந்திர சில்வா இராணுவத்தளபதியானதும் இலங்கையிலிருந்து ஐ.நா. பணிக்காக வீரர்கள் அனுப்பப்படுவது தடைசெய்யப்பட்டது. ஆனால் 3 மாதங்களின் பின்னர் தற்போது அனுப்பப்படவுள்ள இராணுவ வீரர்கள், அதே போர்க்குற்றவாளிக்கு வணக்கம் செலுத்துவதை காண்கின்றோம். இது எவ்வாறு சாத்தியமாகும் என்பதை விளக்குமாறும் குறித்த மனுவில் **ICPPG** கேள்வி எழுப்பியுள்ளது.

இந்நிலையிலேயே, யுத்தக்குற்றவாளிகளான இலங்கை இராணுவம் ஐ.நா. வின் அமைதிப்படையாக மாலி செல்வதை தடுக்க தமிழ் அமைப்புக்கள் ஒன்றிணைந்து விரைந்து செயற்படுமாறு ICPPG அழைப்பு விடுத்துள்ளது.

அதேவேளை குறித்த முறைப்பாடு தொடர்பிலான வரைபினையும் தமிழ் அமைப்புகளிற்கு அனுப்பி வைத்துள்ளது.

ஐ.நா. வின் அமைதிகாக்கும் பணியில் ஈடுபடும் இராணுவ வீரகளுக்கு இராஜதந்திர பாதுகாப்பு வழங்கப்படும். இதனால் அவர்களை எவ்வித விசாரணைகளுக்கும் உட்படுத்தமுடியாது. இந்நிலையிலேயே, யுத்தக்குற்றங்களில் ஈடுபட்ட இராணுவ வீரர்களை இப்பணியில் அமர்த்தி அவர்களை யுத்தக்குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்பிக்க வைக்க இலங்கை அரசும் இராணுவத்தலைமைகளும் தந்திரமாக செயல்படுகின்றன.

இந்நிலையிலேயே, மாலி செல்லவுள்ள இலங்கை இராணு வீரர்களை தடுக்க ஐ.நா.விற்கு அழுத்தம் கொடுக்குமாறு **ICPPG** அழைப்பு விடுத்துள்ளது.

லண்டனை தளமாக கொண்டியங்கும் ICPPG இது குறித்து இன்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை பின்வருமாறு ,

INTERNATIONAL CENTRE FOR PREVENTION AND PROSECUTION OF GENOCIDE
Company Registration No.: 11143022
Head Office : 227, Basement Office, Preston Road, Wembley HA9 8NF, UK
Telephone: +44 (0)786 913 3073 , +44 (0)785 230 4397
email: icppgec@gmail.com website:icppg.org

# PRESS RELEASE

**- FOR IMMEDIATE RELEASE -**

8th November 2019

## Stop Deploying Sri Lankan Troops to Mali for UN Peacekeeping Mission

**London:** The International Centre for Prevention and Prosecution of Genocide (ICPPG) is horrified to learn that A Sri Lankan Army contingent of 243 military personnel will leave for Mali next Tuesday (Nov 12) for UN peacekeeping operations despite the fact that their commander Major General Shavendra Silva is subject to United States Leahy Law sanctions for his role as an alleged war criminal.

The ICPPG has taken immediate action and submitted a formal complaint to Jean Pierre Lacriox, who is currently serving the United Nations as the Under-Secretary-General for Peace Operations and to Michelle Bachelet Jeria, who is the current United Nations High Commissioner for Human Rights, based in Geneva.

Major General Shavendra Silva commanded the 58 Division during the final phase of Sri Lanka's Civil War. He reported to General Jagath Jayasuriya, the Vanni Security Force Head Quarters (SFHQ) Commander. One report said Shavendra Silva in early 2009 had 22 battalions under his command as opposed to the usual 9 in a Division. He is currently the Colonel of the Gajaba Regiment and has remained loyal to the former Defence Secretary and President's brother, Gotabaya Rajapaksa, after the War. He was promoted to Adjutant General of the Sri Lankan Army in 2017 by the Sirisena Government. In 2019, he was appointed Army Chief of Staff[1].

Major General Shavendra Silva was in command during the repeated attacks on and capture of Kilinochchi. There are reasonable grounds to believe that Shavendra Silva ordered attacks with the deliberate intention to hit the civilian objects, such as the hospital and UN buildings, resulting in civilian casualties. The 58 Division was directly involved in the military operation in PTK led by Shavendra Silva. He knew about PTK Hospital's coordinates as they were communicated to the Government, and he had access to drones and UAVs that surveyed the area. There are reasonable grounds to believe that Major General Silva was fully aware that PTK Hospital was being bombarded and shelled as UN officials informed the Sri Lanka Army on multiple occasions that the hospital was coming under attack. Troops under the effective command of Shavendra Silva were involved in the military operations in Pokkanai, when indiscriminate and intentional attacks were directed against civilians, including at milk powder distribution points, which resulted in heavy civilian casualties, including the killing and injuring of women and children. The evidence published in the ITJP report confirms that Major General Shavendra Silva led the military operation against the hospital in Putumattalan and that troops under his command captured the hospital. The UN report states that the surrenders at the Wadduvakkal Bridge were to the 58 Division. An eyewitness interviewed by the ITJP confirms that Major General Shavendra Silva, who has said he was in overall command of the area, personally shook hands with LTTE political leaders who surrendered to him; their corpses were seen on the roadside some time later on the other side of the Wadduvakkal Bridge[2].

In September 2019, the UN spokesman Farhan Haq in New York announced that "We have expressed our concern to the government of Sri Lanka over the appointment of Lieutenant General Shavendra Silva to the

---

[1] http://www.itjpsl.com/assets/shavendra-Silva_-final-dossier.pdf
[2] http://www.itjpsl.com/assets/press/29-Jan-2019-Shavendra-Silva-press-release.pdf

position of commander of the Sri Lanka Army despite well-documented, credible allegations of his involvement in serious violations of international humanitarian and human rights law. In light of this appointment, the U.N. Department of Peace Operations is therefore suspending future Sri Lankan army deployments except where suspension would expose UN operations to serious operational risk"[3]

The ICPPG expressed deep concerns over the deployment of the 243 Sri Lankan soldiers with frontline combat experience in Sri Lanka's war in 2009 despite the announcement of the UN spokesman Farhan Haq in New York and the compelling evidence of war crimes committed under the command of Major General Shavendra Silva, published by the ITJP[4].

The complaint raised the question "*We had understood the United Nations was taking a human rights compliant approach and therefore banning deployment from Sri Lanka once Shavendra became Army Chief; three months later we see these troops saluting the same alleged war criminal. Can you please explain to us how this is possible?"*

Furthermore, ICPPG noted the commander of this Mali contingent comes from the Vijayabahu Infantry Regiment which was instrumental in the mass atrocities in the final war and in particular present at the Nandikaadal lagoon in the final days of the war when summary execution and enforced disappearance were rife.

The ICPPG also raised the question whether the commander of this Mali contingent has actually been screened by the United Nations?

*"It's been more than 10 years since the war was brought to an end, but the Tamils are yet to receive justice and accountability for the War crimes committed by the Sri Lankan troops in Sri Lanka. We continue to receive credible evidence of systematic torture and rape committed by the Sri Lankan security forces against the Tamils in Sri Lanka. This situation is a terrible affront to the Tamil war victims they represent in Sri Lanka and around the world and that the United Nations are letting them down yet again",* said Miss Ambihai Seevaratam, one of the Directors of the ICPPG.

*"If the UN is seriously committed to ensuring that peacekeeping forces are fit for purpose, then DPKO-DFS and the troop contributing country (Sri Lanka in this case) need to ensure that the troops and senior personnel are properly vetted so as to prevent human rights violators from going on peacekeeping operations. We urge you to review the vetting procedure for Sri Lanka since the same issue comes up for the last four commanders sent to Mali"* said Mr Geeth Kulasegaram, who is another Director of the ICPPG and Human Rights Activist.

In summary, ICPPG demands the UN to immediately stop the deployment of the 243 military personnel to Mali on Peace Mission and request to review the vetting procedure as the UN has a due diligence obligation.

The ICPPG also calls upon all the Tamil Diaspora Organisations and other Human Rights Organisations to unite and act urgently to prevent this from happening.

**For Further Information;**

Miss Ambihai Seevaratam +44 7852 304 397

Mr Geeth Kulasegaram +44 7930 236 698 Email: icppguk@gmail.com

---

[3] https://www.reuters.com/article/us-sri-lanka-un-peacekeepers/un-suspends-sri-lankan-troops-from-peacekeeping-over-army-chief-appointment-idUSKBN1WA2SL
[4] http://www.itjpsl.com/assets/press/29-Jan-2019-Shavendra-Silva-press-release.pdf

# ???????????? ?????? ????????? ; ??????? ??????????????????? ???????????



இலங்கை ஜனாதிபதி தேர்தலில் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ள அஞ்சல் மூல வாக்களிப்பின் போது, தமது முடிவின் அடிப்படையில் மக்கள் வாக்களிக்க ஐந்து தமிழ் தேசிய கட்சிகளதும் கூட்டு கோரியுள்ளது.

தகுதிபெற்ற அனைத்து தமிழ் வாக்காளர்களும் வாக்குரிமையை தவறாது பயன்படுத்துமாறும அது கோரியுள்ளது.

இதனிடையே ஜனாதிபதி தேர்தல் குறித்த இறுதி தீர்மானம், அனைத்து வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களும் வெளிவந்தப்பின்னர் மேற்கொள்ளப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மற்றும் கிழக்குப் பல்கலை மாணவர்களின் தொடர் முயற்சியால் கொள்கையில் ஒன்றாகப் பயணிக்கும் ஐந்து தமிழ்கட்சிகள், ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் நிலைப்பாடு தொடர்பாக இறுதி முடிவெடுக்கும் கலந்துரையாடல் இன்று புதன்கிழமை; யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அருகில் அமைந்துள்ள விடுதியொன்றில் நடைபெற்றிருந்தது.

தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் கொள்கை பரப்புரை செயலாளர் க.அருந்தவபாலன், இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் கட்சியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராஜா, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன், தமிழரசு கட்சியின் செயலாளர் தி. துரைராஜசிங்கம், வடமாகாணசபை அவைத் தலைவரும், தமிழரசு கட்சி உறுப்பினருமான சீ. வீ.கே. சிவஞானம், ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், கட்சியின் பொதுச் செயலர் சிறீகாந்தா, ஈபிஆர்எல்எவ் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், புளொட் அமைப்பின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிலையிலேயே மீண்டும் ஒன்று கூடி ஆராய்வதாக தெரிவித்து கலைந்து சென்றுள்ளனர்.



தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள 5 கட்சிகளும்
இன்று கூடி எம்மை எதிர் நோக்கியிருக்கும்
ஜனாதிபதி தேர்தல் சம்பந்தமாக தொடர்ந்து
கலந்துரையாடினோம். தேர்தலில்
போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும்
தேர்தல் அறிக்கைகள் வெளிவராத
இந்நிலையில் நாளைய தபால் மூல
வாக்களிப்பில் எந்தவொரு வேட்பாளருக்கும்
வாக்களிக்குமாறு நாம் தமிழ் மக்களைக்
கோர முடியாதுள்ளது. ஆயினும் தமிழ்
வாக்காளர்கள் தமது வாக்குரிமையை
தவறாது பிரயோகிக்க வேண்டுமென்று நாம்
வேண்டுகோள் விடுக்கின்றோம்.

# ????? ???????????? ??????? ????????? ??????????? ??????; ?????? ??????????? ?????? ??? ????? ????? ???????




## ???? ??? ???? ?????? ???? ??????? ????????

கொலை அச்சுறுத்தல் விடுத்த இலங்கை தூதரகத்தின் முன்னாள் பாதுகாப்பு அதிகாரி பிரியங்கா பெர்ணான்டோவுக்கு எதிரான **ICPPG** யின் வழக்கில் மூன்று சாட்சியங்கள் இன்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில் எதிர்வரும் நவம்பர் மாதம் 19 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதில் ஏனைய சாட்சியங்களின் பதிவு மற்றும் விசாரணைகள் முடிவு பெறும் நிலையில் அன்றைய தினமே இறுதி தீர்ப்பும் வழங்கப்படலாம் என சட்டத்தரணிகளால் நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

வெஸ்மினிஸ்டர் நீதவான் நீதிமன்றில் இன்று காலை 10 மணியளவில் ஆரம்பமான வழக்கு விசாரணையில் பிரியங்கா பெர்னாண்டோ கழுத்தை அறுப்பேன் என காண்பித்த வீடியோவை பதிவு செய்தவரான சபேஷ்ராஜ் சத்தியமூர்த்தி முதலாவது சாட்சியத்தை பதிவு செய்ததும் மற்றய சாட்சியான கோகுலன் மற்றும் பிரதானசாட்சி மயூரதன் ஆகியோரிடமிருந்தும் இன்று நீதிமன்றில் சாட்சிகள் பெறப்பட்டன.

பிரியங்கா பெர்னாண்டோ தரப்பு வழக்கறிஞரால் சுமார் ஒன்றரை மணி நேரங்களிற்கு மேலாக பிரதான சாட்சியிடம் கேள்விகள் தொடுக்கப்பட்டிருந்த நிலையில் மாலை 4 மணியளவில் வழக்கு நடவடிக்கைகளை இடைநிறுத்திய

நீதிபதி எதிர்வரும் நவம்பர் மாதத்திற்கு வழக்கின் தீர்ப்பினை ஒத்திவைத்தார்.

இதேவேளை குறித்த வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் நீதிமன்றின் முன் ஒன்று திரண்ட புலம்பெயர் தமிழர்கள் பிரியங்கா பெர்னாண்டோவை கைது செய்யவேண்டும் என்ற கோசங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டம் ஒன்றிலும் ஈடுபெட்டிருந்தனர்




கடந்த ஆண்டு (2018) பிரித்தானியாவிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு முன்னாள் புலம்பெயர் தமிழர்கள் சுதந்திர தின எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவேளை தூதரகத்தின் அப்போதைய பாதுகாப்பு அதிகாரியாக கடமையாற்றிய பிரியங்கா பெர்ணான்டோ ஆர்பாட்டக்காரர்களை பார்த்து கொலை அச்சுறுத்தல் விடுத்திருந்தார்.

இராணுவ அதிகாரிக்குரிய உத்தியோக பூர்வ உடையில் தூதரகத்திற்கு வெளியே நின்றிருந்த அவர் ஆர்பாட்டக்காரர்களை பார்த்து கழுத்தை அறுப்பேன் போன்ற சமிக்ஞை ஒன்றை காண்பித்திருந்தார்.

இதனையடுத்து சட்டவாளர் அருண்கணநாதன் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் கீத் குலசேகரம் ஆகியோரின் வழிநடத்தலுடன் **ICPPG** யினால் அவருக்கு எதிராக பிரித்தானிய நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு நடப்பாண்டில் (2019) கடந்த பெப்ரவரி மாதம் வெஸ்மினிஸ்டர் நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது அதில் பிரியங்கா பெர்ணான்டோ மீதான இரு குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் அவருக்கு எதிராக பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

எனினும் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவிற்குஇராஜதந்திர தண்டனை முக்தி இருப்பதாக சிறிலங்கா

வெறிவிவகார அமைச்சு, பிரித்தானியவெளிவிவகார அமைச்சின் ஊடாக தெரியப்படுத்திய நிலையில் அவர் மீதான பிடியாணையை வெஸ்ட்மினிஸ்டர் நீதிமன்றம் மீளப் பெற்றுக்கொண்டது.

பின்னர் மார்ச் மாதம் நடைபெற்ற அடுத்தகட்ட வழக்கு விசாரணையில் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவின் கடமைகள் தொடர்பில் நீதிமன்றினால் கோரப்பட்டதுடன் அதில் கழுத்தை அறுக்கும் சைகையைகாண்பித்து அச்சுறுத்திய நடவடிக்கை அவரது இராஜதந்திர கடமையுடன் தொடர்பில்லை என்றுநீதிமன்றம் அறிவித்தது.

அதேவேளை, பிரியங்கா தரப்பிலிருந்து ஆஜரான சட்டத்தரணி, வழக்கு விசாரணைக்கு முன்னதாக அனுப்பிவைக்கப்பட்ட ஆவணங்களை நீதிமன்ற அதிகாரிகள் கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை என மன்றில் எடுத்துரைத்தார் இதனையடுத்து நீதி மன்றின் மீதான இக் குற்றச்சாட்டுகளுக்கு இடமளிக்காது மீண்டும் ஒரு சர்ந்தர்ப்பதை அவர்களுக்கு வழங்க தீர்ப்பினை ஒத்திவைத்தார்

இந்நிலையிலேயே பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் வெஸ்மினிஸ்டர் நீதவான் நீதிமன்றில் இன்று மீண்டும் மேற்படி வழக்கு விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டது.




DIEU
ET MON
2011
WESTMINSTER MAGIST



# ?????? ?????? ????????????????? ????????????????? ; ????????? ???????? ?????? ?? ????????? ????????




இலங்கையில் வெள்ளை வானில் கடத்தப்படுபவர்களின் சிலர் எரியூட்டப்பட்டனர். அதேவேளை கடத்தப்பட்டு கொண்டுவரப்படும் தமிழ் இளைஞர்களிடம் ஒப்புதல் வாக்கு மூலம் பெறுவதற்காக பயங்கரமான சித்திரவதைகளை தனது கண்முன்னே நிகழ்த்தினார்.

இவைகள் அனைத்தும் இலங்கையின் முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்சவின் நேரடி கட்டளையின் கீழே இடம்பெற்றது என கோத்தபாயவிற்கு எதிராக அமெரிக்காவில் வழக்கினை தொடர்ந்துள்ள தமிழரான றோய் சமத்தானம் தெரிவித்துள்ளார்.

'???? ??????' இணையத்தளத்திற்கு இன்று அளித்த விசேட செவ்வியிலேயே இதனை தெரிவித்துள்ளார்.

கனேடிய குடியுரிமையை கொண்ட அவர் 2007 ஆண்டு இலங்கையில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 2010 ஆண்டு உயிர் தப்பி வெளிவந்த அவர் கோத்தபாய ராயபக்கச குறித்து மேலும் பல அதிர்ச்சி தகவல்களை தெரிவித்துள்ளார்.

அவை குறித்து முழுமையான காணொளி பின்வருமாறு,

https://youtu.be/hzKZY8izL7g

---

# ?????????????? ????????????? ?????????????? ?????????????????? - ???????? ???????




இலங்கையின் முன்னாள் பாதுகாப்பு அதிகாரி கோத்தபாய ராஜபக்சவின் உத்தரவிலேயே சித்திரவதைகள் மேற்கொள்ளப்பட்டன என தெரிவித்த உண்மைகள் மற்றும் நீதிக்கான அமைப்பின் (ITJP) பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தற்போது அவருக்கு எதிராக அமெரிக்காவில் தொடரப்பட்டுள்ள வழக்கினை தொடர்ந்து சித்திரவதைகளினால் பாதிக்கப்பட்டவர்கள் மேலும் பலர் முன்வருவர் என நம்பிக்கை வெளிட்டுள்ளார்.

இரட்டை குடியுரிமையினைக் கொண்ட யுத்தக்குற்றவாளியான கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக அமெரிக்காவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சிவில் வழக்கு தொடர்பில் லண்டனில் இன்று நடைபெற்ற ஊடகவியலாலளர் மாநாட்டிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

ஜஸ்மின் சூக்காவை தலைமையாக்கொண்ட சர்வதேச உண்மைகள் மற்றும் நீதிக்கான அமைப்பும் (ITJP), அமெரிக்காவில் உள்ள ஹோஸ்பெல்ட் என்ற சர்வதேச சட்ட நிறுவனமும், மனித உரிமைகள் சட்டத்தரணி ஸ்கொட் கில்மோர் என்பவரும் இணைந்து இலங்கையின் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக சித்திரவதையில் உயிர்தப்பிய தமிழரான ரோய் சமத்தானம் என்பவர் சார்பில் கலிபோர்னியாவில் உரிமையியல் பாதிப்பு வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த வழக்கு தொடர்பான நீதிமன்றின் அழைப்பாணை கடந்த ஞாயிற்றுக்கிழமை கோத்தபாய ராஜபக்சவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது. அதேவேளை படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளரான லசந்த விக்கிரமதுங்கவின் சார்பில் லசந்தவின் மகள் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பற்றிய அறிவிப்பும் அவரிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிலையில், ITJP சார்பில் ரோய் சமத்தானம் என்பவர் தாக்கல் செய்த வழக்கு குறித்து

ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்தும் மாநாடு இன்று லண்டனில் நடைபெற்றது.

இதில் குறித்த வழக்கினை தாக்கல் செய்த தமிழரான றோய் சமத்தானம் ITJP யின் பணியப்பாளர் ஜஸ்மின் சூக்கா மற்றும் குறித்த வழக்கின் சட்டத்தரணியான ஸ்கொட் கில்மோர் ஆகியோர் கலந்துகொண்டனர்.




**??????? ???????**

அந்தவகையில் இதுவே கோத்தபாய ராஜபக்சவிற்கு எதிராக வெளிநாட்டில் தாக்கல் செய்யப்படுகின்ற உரிமையியல் வழக்குகளின் முதலாவது நிகழ்வு என்று தெரிவித்த ஜஸ்மின் சூக்காக இதனையடுத்து சித்திரவதைக்கு உள்ளான ஏனையவர்களும் முன்வந்து இவ்வாறான வழக்குகளை தொடருவார்கள் என தான் நம்புவதாக தெரிவித்தார்.

முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ச மீது தற்போது நாம் வழக்கு தொடர்வதற்கு சிறந்த சந்தர்ப்பமாக இது காணப்படுகிறது. ஏனெனில் சித்திவதை செய்வதற்கான உத்தரவு மற்றும் கட்டளைகள் அனைத்தும் கோத்தபாயவினாலேயே வழங்கப்பட்டுள்ளது. இந்த செயற்பாடுகளுக்கு கோத்தபாய சட்டபூர்வமாக பொறுப்புகொண்டவர்.

பாதுகாப்பு செயலாளர் என்ற ரீதியில் இந்த முறைகேடுகள் நடைபெற்றதா அல்லது சரியான முறையிலேயே செயற்பட்டார்களா என அவர் நன்கு அறிந்திருந்தார். ஆனால் அவர் குற்றவாளிகளை விசாரணைசெய்ய அல்லது தண்டிக்க சட்ட நடவடிக்கைகள் எடுக்கவில்லை.

எனவே தற்போது கோத்தபாய ராஜபக்ச அமெரிக்காவில் இருக்கும் தருணத்தில் அவர் மீதான வழக்கு தாக்கல் செய்வதற்கு சிறந்த வாய்ப்பு கிட்டியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

**????? ?????????**

இதேவேளை குறித்த வழக்கின் பிரதானியான றோய் சமத்தானம் கோத்தபாயவுக்கு எதிராக வழக்கினைத்

தொடர தான் முன்வந்தமை குறித்து தெளிவுபடுத்துகையில்,
கனேடிய குடியுரிமையை கொண்டிருந்த நான் இலங்கை சென்றிருந்த போது கோத்தபாய ராஜபக்சவினால் நேடியாகவே பாதிப்புக்கு உள்ளானேன்.

பாதுகாப்பு செயலராக இருந்த காலத்தில் அவரது நேரடி கட்டளையின் கீழ் செயற்பட்ட இலங்கை காவல்துறையினரால் 2007 ஆம் ஆண்டு கொழும்பில் வைத்து தவறான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்டேன். 3 ஆண்டுகள் சொல்லில் அடங்கா சித்திரவதைகளை அனுபவித்து இறுதியில் பணம் செலுத்தியதன் பின்னர் 2010 இல் விடுதலை செய்யப்பட்டேன்.

ஆனால் விடுதலை செய்யப்படும் முன்னர் போலியான ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றில் கையொப்பமிடுமாறு வற்புறுத்தப்பட்டேன்.

இவ்வாறு உயிர் தப்பிப் பிழைத்து வந்த நான் 2011 ஆம் ஆண்டு எனக்கெதிராக இலங்கை அரசினால் இழைக்கப்பட்ட துன்புறுத்தல் தொடர்பில் கனேடிய பாராளுமன்றில் சாட்சியமளித்தேன். அதேவேளை 2016 ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் சபை வழக்கில் நான் வெற்றி பெற்றேன். ஆனால் இலங்கை அரசோ எனக்கான நட்ட ஈட்டு தீர்ப்பினை பின்பற்ற தவறிவிட்டது. இதுவரையில் பொறுப்புக் கூறல் என்பது இலங்கையில் இல்லவே இல்லை.

இந்நிலையிலேயே, எனக்கெதிராக இழைக்கப்பட்ட சித்திரவதைகளுக்கு நீதிகோரி கோத்தபாயவிற்கு எதிராக இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளேன்.

எனது இந்த இந்த நடவடிக்கையானது இலங்கையில் சித்திரவதைக்கு உள்ளானவர்களுக்கு எதிர்காலத்தின் மீதான நம்பிக்கையைக் கொடுக்கும் என நம்புவதாக தெரிவித்தார்.

**?????????? ??????? ?????????**

இதனிடையே குறித்த வழக்கின் சட்டத்தரணியான ஸ்கொட் கில்மோர் கோத்தபாய ராஜபக்சவிற்கு எதிராக வழக்கினை தாக்கல் செய்ய முன் வந்த றோய் அவர்களின் துணிச்சலை நாம் மெச்சுவதுடன் இலங்கையில் நீதியை பெற்றுக்கொள்வதற்கு எமது நிபுணத்துவமும் வளங்களும் பயனுள்ளதாக இருக்க முடியும் என்பதையிட்டு தாம் மகிழ்ச்சியடைகிறோம் என தெரிவித்தார்.

https://youtu.be/t3i5zvcmR4g

---

# ?????? ???????????????? ???????????????? ????????? ; ??????????? ????????? ?????????!



தமிழீழ தேசியக்கொடிக்கு பிரித்தானியாவில் தடையில்லை என்பது மீண்டுமொரு முறை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு பிரித்தானியாவின் ஒக்ஸ்போர்ட் நகரில் தமிழீழ தேசிய கொடியுடன் கைதுசெய்யப்பட்ட 4 பேர் மீதான வழக்கை தள்ளுபடி செய்த பிரித்தானிய காவல்துறையினர் தமிழீழ தேசியக்கொடி தடைசெய்யப்பட்டதொன்றில்லை என்பதனையும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

சுமார் 6 மாதகால தொடர் தீவிர விசாரணைகளின் பின்னரே மேற்படி மகிழ்ச்சி தரும் செய்தியை அவர்கள் அறிவித்துள்ளனர்.




அந்தவகையில் பிரித்தானியாவின் எப்பகுதியிலும் தமிழீழ தேசியக்கொடிக்கு தடையில்லை என்பது உறுதியானதுடன் தமிழீழ தேசியகொடிக்கு பிரித்தானியாவில் தடை உண்டு என்று பொய்ப்பிரச்சாரம் மேற்கொண்டு மக்களிடையே குழப்பநிலையை உண்டுபண்ணி வரும் பிரித்தானிய தமிழர் பேரவை (BTF) போன்ற தேசியகொடி மறுப்பு சில அமைப்புகளின் நாடகமும் தவிடுபொடியானது.

கடந்த 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பிரித்தானியாவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக ஒக்ஸ்போர்ட் யூனியனின் முன்றலில் புலம்பெயர் தமிழர்களால்

எதிரப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இந்து சமுத்திர பிராந்தியத்தின் புவிசார் அரசியல் தொடர்பில் உரையாற்ற அழைக்கப்பட்டிருந்த இனப்படுகொலை அரசியின் பிரதமருக்கு எதிராக நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில் குறித்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் வழமைபோன்று தமிழீழ தேசியகொடிகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ரணிலுக்கு எதிராக கோஷங்களை எழுப்பியபோது அங்கு நின்றிருந்து இலங்கை தூதரகத்தை சேர்ந்த ஊழியர் ஒருவர் அவர்கள் பயங்கரவாதிகளின் கொடிகளை வைத்திருக்கிறார்கள் என திட்டமிட்டு வெண்டுமென்றே காவலில் ஈடுபட்ட பொலிஸாருக்கு தவறான தகவலை வழங்கினார்.

இதனையடுத்து அடாத்தாக செயல்பட்ட பொலிஸார் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் முன்னாள் விளையாட்டு சமூகநல பிரதியமைச்சர் சொக்கலிங்கம் யோகலிங்கம் உட்பட தமிழீழ தேசிய கொடிகளை வைத்திருந்தவர்கள் என 4 பேரை கைது செய்தனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் மேற்படி நால்வரையும் கைது செய்த ஒக்ஸ்போர்ட் தேம்ஸ்வலி பொலிசார் சுமார் 24 மணிநேர விசாரணைகளின் பின்னர் பிணையில் விடுதலைசெய்தனர்.




மேற்படி செயற்பாட்டாளர்களின் விடுதலைக்காக விரைந்து செயற்பட்ட மனித உரிமைகள் செயற்பாட்டாளர் கீத்குலசேகரம் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊடாக அவர்களின் கைதுக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பிணையில் விடுதலை செய்யப்பட்டதன் பின்னர் குறித்த கைது விவகாரம் தொடர்பில் பிரித்தானிய பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுவந்தனர். குறிப்பாக நாடுகந்த அரசாங்கத்தின் முன்னாள் விளையாட்டு சமூகநல பிரதியமைச்சர் சொக்கலிங்கம் யோகலிங்கம் அவர்களின் வீடு தீவிரமாக சோதனை செய்யப்பட்டதுடன் அவரது கைத்தொலைபேசி உட்பட சில உடைமைகள் பொலிஸாரால் கையகப்படுத்தப்பட்டு

சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வந்தது.

இவ்வாறு சுமார் 6 மாதகாலங்கள் தொடர் விசாரணைகளை மேற்கொண்டுவந்த பொலிஸார் தற்போது கைது செய்ப்பட்வர்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்த எவ்வித ஆதாரங்களும் இல்லை என தெரிவித்து வழக்கை தள்ளுபடி செய்துள்ளனர்.

அதேவேளை கைது செய்யப்பட்டவர்கள் ஏந்தியிருந்த தமிழீழ தேசியகொடி பிரித்தானியாவில் தடைசெய்யப்பட்ட கொடி அல்ல என்பதையும் தாம் ஏற்றுக்கொள்ளுவதாக அதில் தெரிவித்துள்ளனர்.






[illegible] 3 [illegible]






***?.??????????***

புலம்பெயர் தமிழர்களிடையே பெரும் எதிர்ப்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் 3 ஆவது பொதுத்தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ளது.

பிரித்தானியா கனடா பிரான்ஸ் ஜேர்மனி சுவிஸ் அமெரிக்கா அவுஸ்திரேலியா டென்மார்க் நோர்வே இத்தாலி தென் ஆபிரிக்கா நியூஸிலாந்து சுவீடன் பின்லாந்து மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகளில் வாழும் புலம் பெயர் தமிழர்களிடையே இப் பொதுத்தேர்தல் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் பிரித்தானியாவுக்கான நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி நடைபெறும் என பிரித்தானியானிவுக்குரிய தேர்தல் குழு அறிவித்துள்ளது.

இளம் தலைமுறையினர் அதிகம் களமிறங்கியுள்ள பிரித்தானியாவுக்கான இம்முறை தேர்தலில் 20 அரசவை உறுப்பினர்கள் தெரிவுக்காக 32 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். லண்டனிலிருந்து 18 உறுப்பினரும் ஸ்கொட்லாந்து மற்றும் வேல்ஸ் ஆகிய இடங்களிலிருந்து தலா ஒருவருமாக மொத்தம் 20 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

பெண்கள் இளையோர் ஏனையோர் என மூன்று பிரிவுகளின் அடிப்படையில் இத்தெரிவுகள் இடம்பெறவுள்ளது.

அந்தவகையில் பிரித்தானியாவில் **????????? ?????????** 101- கிருஷாந்த் துரைசிங்கம், 102-குகறூபன்

கணேசலிங்கம், 103-சந்துரு குருலிங்கம், 104-கிஷ்ணமூர்த்தி கஜவதன், 105- கந்தையா அஜந்தன், 106 – சந்திரகுமார் பிரேம்குமார், 107- ராஜதுரை பார்த்திபன், 108- ராசேந்திரம் நுஜிதன் ஆகியோரும் ⍰⍰⍰⍰⍰⍰⍰ ⍰⍰⍰⍰⍰⍰⍰ 201- பிரியந்திய சுதர்சன், 202- குமுதினி மார்க்கண்டு, 204- கார்த்திகா சுரேந்திரன், 203- பாலாம்பிகை முருகதாஸ் ஆகியோரும்

⍰⍰⍰⍰⍰⍰⍰⍰ ⍰⍰⍰⍰⍰⍰⍰⍰ 301- ஞானசேகரம் கலைராசன், 302- சொக்கலிங்கம் யோகலிங்கம், 303 – வேலுப்பிள்ளை மகாலிங்கம் மயூரதன், 304- விசாகன் நடராஜா, 305- சுந்தரலிங்கம் கணேசலிங்கம், 306- சுரேந்திரன் வடிவேல், 307- விநாசித்தம்பி லிங்கஜோதி, 308- குலசிங்கம் சந்திரமோகன், 309- திருக்குமரன் இராசலிங்கம், 310- பத்மநாதன் மயில்வாகனம், 311- ஜெயராஜ் ஜெகநாதன், 312- ராமு சோதித்தாஸ், 313- அம்பலவாணர் அகிலேஸ்வரன், 314- தாமோதரம்பிள்ளை முருகதாஸ், 315- சிதம்பரம் சசிதரன், 316- தேவராஜா நீதிராஜா, 317- கந்தப்பு ஆறுமுகம், 318- வன்னியசிங்கம் குணசீலன், 319- பத்மநாபன் மணிவண்ணன், 320- அருணாச்சலம் ராஜலிங்கம் ஆகியோரும் வேட்பாளர்களாக போட்டியிடுகின்றனர்.

இந்நிலையில், வாக்குகளை செலுத்த தேர்தல் நடைபெறும் நாடுகளில் வாழும் புலம்பெயர்தமிழர்கள் தமது வாக்கு உரிமைக்கான பதிவுகளை செய்யவேண்டும். அதனடிப்படையில் பிரித்தானியாவில் நடைபெறும் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க விரும்புவோம் https://tgteelection.org/registering-to-vote/ என்ற இணையத்தினூடு பதிவுகளை செய்து தமக்காக வாக்குச்சீட்டுகளை பெற்றுக்கொள்ளமுடியும்.

குறித்த தபால் மூல வாக்கு சீட்டுகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் ஏப்ரல் 07 ஆம் திகதிவரை தேர்த்தல் குழுவினரால் முகவரிகளுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதுடன் வாக்களிப்போர் அதனை திருப்பி அனுப்புவதற்குரிய இறுதி நாள் ஏப்ரல் 19 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை நேரடி வாக்களிப்பு செய்ய விரும்புவோர் தேர்தல் நாளான 27 ஆம் திகதி வாக்குச் சாவடிகளுக்கு சென்று நேரடியாகவே தமது வாக்குகளை செலுத்தமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர்கள் மீது திட்டமிட்டு நடத்தப்பட்ட இனப்படுகொலை நிகழ்ந்தேறிய முதலாவது வருடத்தில் ஈழத்தமிழர்களின் அபிலாசைகளை சர்வதேசத்திற்கு எடுத்துரைக்க நீதிக்கான குரலாக அரசியல் ரீதியில் புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள தமிழர்களை மையமாக கொண்டு கருதுகோள் ரீதியானதொரு அரசாங்கமாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் 2010ம் ஆண்டு உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

- 
நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின்
மூன்றாவது அரசவைக்கான பொதுத்தேர்தல் 2019
தமிழீழ உறவுகளின் தற்போதைய
தேவை அறிந்து
தமிழீழம் நோக்கிய பாதையில் ....
102
VOTE
கணேசலிங்கம் குகரூபன்
வேட்பாளர் இலக்கம் : 102
வாக்காளராக பதிவு செய்ய : tgteelection.org
- 
நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்
Transnational Government of Tamil Elam
நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் 3வது பொதுத் தேர்தல்
TGTE 3rd Genaral Election
27th April 2019
Vote for a Change
தமிழரின் தாகம் தமிழீழத்தாயகம்.
கஜவதனன் கிருஸ்ணமூர்த்தி ஐயர்
Kajavathanan Kirushanmoorthy Iyar
உங்கள் வாக்கினை 104ற்கு அளியுங்கள
VOTE!
வேட்பாளர் எண்
104

- 
நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின்
மூன்றாவது அரசவைக்கான பொதுத்தேர்தல் 2019
தமிழீழ உறவுகளின் தற்போதைய
தேவை அறிந்து
தமிழீழம் நோக்கிய பாதையில் ....
303
VOTE
வேலுப்பிள்ளை மகாலிங்கம் மயூரதன்
வேட்பாளர் இலக்கம் : 303
வாக்காளராக பதிவு செய்ய : tgteelection.org
- 
Vote for a Change!
Vote for Number 101 !
Kirushanth Thuraisingam
2019
3வது பொது
தேர்தல்
வாக்கு!
உங்கள் உரிமை!
உங்கள் கடமை!
உங்கள் குரல்!
www.tgteelection.org
Apr
27
3rd General
Election
Vote - It is your Right!



நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின்
3 வது பொதுத் தேர்தல் – 2019
யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தாயக உறவுகள் மற்றும் இடம்பெயர்ந்து புலம்பெயர் தேசங்களில் வாழ்கின்ற உறவுகளின் மீள் கட்டமைப்புக்களை உருவாக்கழட
தாயகத்தில் காணாமல் போனரை மீட்டு மறுவாழ்வு அளித்திட
வரலாற்றுக் கடமை ஒன்று எம் முன்னே காத்துக் கிடக்கின்றது. தேசத்துக்கான ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டம் முள்ளிவாய்க்காலுடன் முற்றுப்பெற்று விடவில்லை என்பதை உலகறியச் செய்வோம்.
போரினால் பாதிக்கப்பட்டு வறுமையில் வாடும் மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த என்னால் இயலுமான செயற்பாடுகளை மேற்கொள்வேன்.
ஒன்றாக இணைவோம்! ஒன்றாக எழுவோம்!
சேர்ந்தே வெல்வோம்!
அனைத்து தமிழ் அமைப்புகளையும், புலம் பெயர் வாழ் தமிழர்களையும் ஒன்றிணைத்து நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தினை வலுவான கட்டமைபாக உருவாக்கிட எம் மாவீரர் கண்ட கனவை நனவாக்க பாடுபடுவேன்!!
இலங்கைக்கு எதிரான பொருளாதாரத் தடையை முன்னெடுத்தல்
சந்திரகுமார் பிரேம்குமார்
வேட்பாளர் எண்
No.106
தபால் மூல வாக்குப் பதிவிற்கான இறுதி நாள்: 29.03.2019
தபால் மூல வாக்குகளை அனுப்புவதற்கான இறுதி நாள்: 19.04.2019
தேர்தல் நாள்: ஏப்ரல் 27



புலம் பெயர் வாழ் தமிழீழ மக்களே!
எமது உரிமையை வென்றெடுக்க அனைத்து
தமிழர்களும் ஓரணியில் நின்று
வாக்களிக்கவேண்டிய நேரமிது.
நாடு கடந்த தமிழீழ அரசு
TRANSNATIONAL GOVERNMENT OF TAMILEELAM
107
VOTE!
FOR A CHANGE
27TH APRIL 2019
ராஜதுரை பார்த்தீபன்
PARTHEEPAN
VOTE NO 107


நாடு கடந்த தமிழீழ
அரசாங்கம்
புலம் பெயர் வாழ் தமிழீழ
மக்களே !!
எங்கள் உரிமைகளை வென்றெடுக்க,
சரியான தருணம் இது....!!
வருகின்ற
ஏப்ரல் 27ம் திகதி
நடைபெறஇருக்கின்ற
நாடு கடந்த தமிழீழ
அரசாங்கத்தின்
மாபெரும் தேர்தலில்
வாக்களியுங்கள்,,!!
கந்தையா அஜந்தன்
வேட்பாளர் இல: 105
105 X
M: 0747 753 3583
E: Ajanthan@live.co.uk


நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின்
3வது பொதுத் தேர்தல்-2019
இலங்கையை போர்க்குற்றவளியென சர்வதேசத்தின் முன் நிறுத்திட...
தாயகத்தில் காணமல் போனரை மீட்டு மறுவாழ்வு அளித்திட...
யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தாயக உறவுகள் மற்றும் இடம்பெயர்ந்து புலம்பெயர் தேசங்களில் வாழ்கின்ற உறவுகளின் மீள் கட்டமைப்புக்களை உருவாக்கிட...
உலகில் பரந்து வாழும் தமிழ் அமைப்புக்களையும், மக்களையும் ஒரு குடையின் கீழ் ஒன்று திரட்டி எம் தாயகத்திற்கான பலமான நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தை புலம்பெயர் தேசத்தில் மேலும் வலுசேர்த்துச் செயல்பட...
ஒன்றாக இணைவோம்!
ஒன்றாக எழுவோம்!
சேர்ந்தே வெல்வோம்!
சந்துரு குருலிங்கம்
Chanthuru Kurulingam
VOTE
வேட்பாளர் எண்:
103
தபால் மூல வாக்குப் பதிவிற்கான இறுதி நாள்: 29.03.2019
தபால் மூல வாக்குகளை அனுப்புவதற்கான இறுதி நாள்: 19.04.2019
தேர்தல் நாள்: ஏப்ரல் 27
மேலதிக விபரங்களுக்கு: ckuru1987@gmail.com
வாக்காளராக பதிவு செய்ய: https://tgteelection.org/registering-to-vote/

# ??????????? ??????????? ???????????? ?????????? ????????? ?????????!




## ???????? ???????????????? ?????? ?????????? ????????? ?????? ????????

பிரித்தானியாவில் வைத்து புலம்பெயர் தமிழர்களுக்கு ‘கழுத்தை அறுப்பேன்’ என சைகை காண்பித்து அச்சுறுத்தல் விடும் செயலானது லண்டனிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் பாதுகாப்பு ஆலோசகராக கடமையாற்றிய முன்னாள் இராணுவ அதிகாரி பிரியங்கா பெர்ணான்டோவின் கடமையுடன் தொடர்புடைய செயல் இல்லை என வெஸ்மினிஸ்டர் நீதவான் நீதிமன்று அறிவுத்துள்ளது.

பிரியங்கா பெர்னாண்டோவுக்கு இராஜதந்திர அதிகாரம் உள்ளமையால் அவரை எந்தவித விசாரணைகளுக்கும் உட்படுத்த முடியாது என இலங்கை அரசு தொடர்ச்சியாக வாதாடி வந்த நிலையிலேயே நீதவான் நீதிமன்றம் இன்று இந்த முடிவை அறிவித்துள்ளது.

இதனால் பிரியங்க பெர்னாண்டோவிற்கு உள்ள இராஜதந்திர தந்திர முக்தி செல்லுபடியாகது எனவும் அவர் மீது வழக்கு தொடர்வதற்கும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது என நீதவான் நீதிமன்ற தலைமை நீதிபதியால் இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கொலை அச்சுறுத்தல் விடுத்த பிரியங்கா பெர்னாண்டோவுக்கு எதிராக **ICPPG** யினால் தொடரப்பட்ட வழக்கில் வெஸ்மினிஸ்டர் நீதவான் நீதிமன்றில் இன்று நடைபெற்ற விசாரணைகளின் போதே நீதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அந்தவகையில் பிரியங்கா பெர்னாண்டோவிற்கு இராஜதந்திர பாதுகாப்பு இருப்பதனால் அவரை எந்தவித விசாரணைகளுக்கும் உட்படுத்த முடியாது என்ற அவர் தரப்பினரது வாதம் தவறு என நிரூபிக்கப்பட்டதுடன் பெர்ணான்டோவிற்கு எதிராக முன்னரே மன்றில் நிரூபிக்கப்பட்ட இரு குற்றச்சாட்டுக்களும் நீதிபதியினால் நீக்கப்படவில்லை.

இந்நிலையில், எதிர்வரும் 15 ஆம் தகிதி நடைபெறவுள்ள அடுத்தக்கட்ட வழக்கு நடவடிக்கைகள் வரை பிரியங்கா பெர்னாண்டோ குற்றவாளியாகவே இனங்காணப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு (2018) இலங்கையின் சுதந்திர தின எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது லண்டனில் உள்ள இலங்கை தூதரகத்தின் அப்போதைய பாதுகாப்பு அதிகாரியா கடமையாற்றி பிரியங்கா பெர்னாண்டோ, ஆரப்பாட்டக்காரர்களை பார்த்து கொலை அச்சுறுத்தல் ஒன்றினை விடுத்திருந்தார்.



இதனையடுத்து அவரது குறித்த செயலுக்கு எதிராக இனப்படுகொலையை தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான சர்வதேச மையத்தினால் (ICPPG) தொடரப்பட்ட வழக்கில் பிரியங்கா பெர்னாண்டோ மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களில் இரண்டு நீதிமன்றினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் அவருக்கு எதிராக பிடியாணை ஒன்றும் பிறப்பிக்கப்பட்டது.

வெஸ்மினிஸ்டர் நீதவான் நீதிமன்றினால் கடந்த ஜனவரி மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற வழக்கு விசாரணையின் போதே 3 பேர் கொண்ட நீதிபதிகள் குழுவினால் இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இதில் பிரியங்கா தரப்பிலிருந்து சட்டத்தரணிகள் எவரும் மன்றில் ஆஜராகியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், குறித்த பிடியாணைக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த இலங்கை அரசு அவருக்கிருந்த இராஜதந்திர பாதுகாப்பு சலுகைகளை காரணம் காட்டி வெளிநாட்டு அமைச்சினூடாக குறித்த வழக்கை மீண்டும்

நீதிமன்றிற்கு கொண்டு வந்தது.

அந்தவகையில் கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி நடைபெற்ற வழக்கு விசாரணையில் பிரியங்காவுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டிருந்த பிடியாணை நீதிபதியினால் தள்ளுபடி செய்யப்பட்டது. எனினும் அவருக்கு எதிரகா நிரூபிக்கப்பட்டிருந்த இரு குற்றச்சாட்டுக்களும் நீக்கப்பட்வில்லை.




இந்த வழக்கு விசாரணையின் போது பிரியங்கா தரப்பிலிருந்து சட்டத்தரணிகள் மன்றில் ஆஜராகியிருந்தனர். இதன் போது குற்றச்சாட்டப்பட்டவர் தரப்பு நியாயங்களை மன்றிற்கு தெரிவிக்கும் படி நீதிபதி அவர்களை கோரிய போது அவற்றை சமர்ப்பிக்க அவர்கள் நீதிபதியிடம் கால அவகாசம் கோரியிருந்தனர். இதனையடுத்து குறித்த வழக்கினை மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு அதாவது இன்றைய தினம் நீதிபதி ஒத்திவைத்தார்.

இந்நிலையிலேயே, பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் இன்று மீண்டும் வழக்கு விசாரணைகள் ஆரம்பமாகின.

வெஸ்மினிஸ்டர் நீதவான் நீதிமன்றின் இலக்கம் 01 அறையினில் நடைபெற்ற வழக்கு விசாரணையில் பிரியங்கா பெர்னாண்டோ தரப்பிலிருந்து ஆஜரான சட்டத்தரணி பிரியங்கா பெர்னாண்டோவுக்கு இராஜதந்திர பாதுகாப்பு சலுகைகள் இருப்பதால் அவரை எந்தவிதமான விசாரணைகளுக்கு உட்படுத்த முடியாது என தெரிவித்ததுடன் அவருக்குள்ள உத்தியோகபூர்வ கடமைகளையும் பட்டியல் படுத்தி மன்றில் தெரிவித்தார்.

***[illegible]*** **LTTE** ***[illegible].***

இதன் போது குறுக்கிட்ட நீதிபதி குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோக பூர்வ கடமைகளில் எங்கேயாவது கொலை அச்சுறுத்தல் விடுக்கலாம் அல்லது அவ்வாறான சைகை காண்பிக்கலாம் என எழுதப்பட்டுள்ளதா என கேள்வி எழுப்பினார். இதன் போது மன்றின் பார்வையாளர் அரங்கில் சிரிப்பொலிகள் எழுந்ததை அவதானிக்க முடிந்தது.

இந்நிலையில் இராஜதந்திர சலுகை என்ற வாதம் தவறு என்பதை சுட்டிக்காட்டிய மனுதாரர் தொடர்பிலான வழக்கறிஞர்,

பிரியங்கா பெர்னாண்டோவிற்கு தற்போது இராஜதந்திர சலுகைகள் இல்லை என கூறினார். அதாவது, குறித்த குற்றச்செயலை புரியும் போது அவர்கள் கூறும்படியான பாதுகாப்பு சலுகைகள் அவருக்கு இருந்த போதிலும் தற்போது அவர் இலங்கை அரசால் மீளப் பெறப்பட்டுள்ளதால் அவருக்கான சலுகைகள் எதுவும் இல்லை எனவும் அதேவேளை பிரியங்கா பெர்னாண்டோ செய்த செயலானது (கழுத்தை அறுப்பேன் என்ற சைகை) அவரது உத்தியோக பூர்வ செயற்பாடுகளுக்கு உட்பட்டது அல்ல என்பதனையும் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில், இடைவேளையின் பின்னர் மீண்டும் ஆரம்பமான அமர்வில் இன்றை வழக்கின் இறுதி அறிக்கையை வாசித்த நீதிபதி அதில் பிரியங்கா பெர்னாண்டோ தொடர்பில் முன்வைக்கப்பட்ட இராஜதந்திர சலுகை அதிகாரம் செல்லுபடியாகது எனவும் அவர் மீது வழக்கு தொடர்வதற்கும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது என அறிவித்தார்.

அதேவேளை, பிரியங்கா பெர்னாண்டோவிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த அழைப்பாணை தொடர்பிலான விசாரணைகள் அடுத்தகட்ட அமர்வின் போது விசாரணைக்குட்படுத்தப்படும் என தெரிவித்து எதிர்வரும் 15 ஆம் திகதி வழக்கினை ஒத்திவைத்தார்.

இன்று நீதிமன்றில் மேற்படி வழக்கு விசாரணைகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் போது ‘பிரியங்கா பெர்னாண்டோவை கைது செய்’ என்ற கோசங்களை எழுப்பிய வாறு புலம்பெயர் தமிழர்கள் நீதிமன்றின் முன்றலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

*ICPPG [illegible],*

https://youtu.be/vkVx3RhaVS8